பக்கீர்த்தம்பி
பௌஸியா அலியார்
புனைந்த

# மணி ஆரம்

## சிறுவர் பாடல்கள்



வெளியீடு

பைத்துல் ஹிக்மாஹ்
சம்மாந்துறை - 04

இப்புத்தகத்தின் வெளியீட்டு விழா
ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் நினைவு தினத்துடன்
சேர்ந்து நடைபெற்றது

பக்கீர்த்தம்பி

# பௌஸியா அலியார்

புனைந்த

# மணி ஆரம்

# றுவர் பாடல்கள்

வெளியீடு
பைத்துல் ஹிக்மாஹ்
சம்மாந்துறை-4

**நூல்விபரம்:**

பெயர் : மணி ஆரம் -சிறுவர் பாடல்கள்

வகை : சிறுவர் இலக்கியம்

பதிப்புரிமை: © பௌஸியா அலியார் 2012 டிசம்பர்

வெளியீடு : பைத்துல் ஹிக்மாஹ்
53, கீச்சார் வீதி, சம்மாந்துறை-4

அச்சு : றோஸ் பிறிண்டர்ஸ், சம்மாந்துறை

விலை : ரூபா 200

**Bibiliographical Data:**

Mani Aaram-Siruvar Paadalkal

First Edition ©Fouzia Aliyar 2012 Dec.

Baithul Hikmah Publication
53, Keechar Road, Sammanthurai-4

Rose Printers, Sammanthurai

Price: Rs. **200**

**ISBN 978-955-44144-0-2**

# சமர்ப்பணம்

அன்பினை அமுதாய் ஊட்டி
அனுதினம் அணைத் தெடுத்து
கண்ணெனக் கல்விதனை தந்து
கனிவுடன் ஒழுக்கம் வார்த்த
அன்னையார் சீனத்தும்மா
ஆருயிர்த் தந்தை பக்கீர்த்தம்பி
இந்நூல் இருவருக்கும் என
ஈந்தேன் இறைவன் பெயரால்

## வெளியீட்டுரை

இந்நூல் எமது பதிப்பகத்தின் ஐந்தாவது வெளியீடு. எமது தாயகத்தைப் பொறுத்தவரை எமது வெளியீடுகள் தனிப்பட்ட ஒரு பதிப்பகத்தின் சொத்து. மேலும், "பைத்துல் ஹிக்மாஹ்" என்பது நூலுக சேவையுடன் நூல் ஆய்வு, நூலாக்கம் என்பன இணைந்த கூட்டமைப்பாகும்.

இன்று உயர் கல்வி பெறும் மாணவர்களும் ஆசிரியர் சமூகமும் பல ஆக்கபூர்வமான அறிவுப்பணிகளில் ஈடுபட்டுவருவது நல்லதொரு சமுதாயத்துக்கான குறியீடாக விளங்குகின்றது.

அறிவுப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடும் நவயுகத்தில் நூலாக்கம் அதற்கு ஒத்திசைவாக அமைவது இன்றியமையாதது.

அவ்வாறான பணிகளுக்கு இப்பதிப்பகம் என்றும் துணை நிற்கும்.

**பணிப்பாளர்**
**பைத்துல் ஹிக்மாஹ்**
071- 730 2 830

## கவிஞர் மன்சூர் ஏ. காதிர் அவர்கள் வழங்கிய அணிந்துரை

ஈழமேகம் என்ற பெயரை அவ்வளவு இலகுவாக தமிழ் கூறும் நல்லுலகு மறந்திருக்க முடியாது அதேவேளை இலங்கைத் திரு நாட்டுக்குப் புகழ் சேர்த்துத் தந்த ஆளுமைகளின் பட்டியலில் அந்தப்பெயரை நீக்கிவிட்டு அப்பட்டியலைப் பூரணப்படுத்தி விடவும் முடியாது.

சிறந்த மேடைப் பேச்சாளராக அறிமுகமாகி தனது பதினெட்டாவது தலைமுறையின் பூர்வீக இடமான தமிழ் நாட்டின் காயல்பட்டினம் வரை சொற்பொழிவுக்காகச் சென்று அறிஞர் அண்ணாத்துரை வியந்து பாராட்டும் வண்ணம் உரைமழை பொழிந்து நமது மண்ணுக்குப் புகழ் சேர்த்தவர்தான் பக்கீர்த்தம்பி மாஸ்டர். அத்தகைய சிறப்புக்கும் மேதா விலாசத்துக்கும் உரியவரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் விளைந்த பயிரின் அறுவடையை நமது வித்துவ ஆடுகள் விரைவாக மேய்ந்து விட்டுச் செல்ல முடியாது என்பதற்கு இத்தொகுதி முயற்சி சான்று பகரும்.

கவிஞர் பக்கீர்த்தம்பி பௌஸியா அலியார், நாவலர் ஈழமேகம் அவர்களின் ஏகபுதல்வியாவார். அவர் இலக்கிய ஆற்றலை தனக்கு ஒரு முதுசொம்மாக வாய்க்கப் பெற்றவர்.

இற்றைக்கு 30-35 ஆண்டுகளுக்கு முன்னர் தினபதி எனும் நாளிதளின் கவிதா மண்டலத்தின் மூலம் சம்மாந்துறையைச் சேர்ந்த பலர் கவிதைகள் எழுதினர். சம்மாந்துறை அஸீஸ், பௌஸியா பக்கீர்த்தம்பி, பரீதா இஸ்மாயில், மும்தாஜ், வீ.ஆனந்தன், வஸந்தம் எஸ்.எல்.எம். இப்றாஹீம்,ஏ.அக்பர், ஷுக்கூர், முஹம்மட் அலி (ஜப்பார் ஜி.எஸ்.) உட்பட இன்னும் பலர் தங்களது ஆக்கங்களை சிரேஷ்ட கவிஞர்களின் அறிமுகத்துடன் பிரசுரித்தனர். அவர்களில் சிலர் காணாமற் போனாலும் இன்றுவரை நின்று நிலைக்கும்

மிகச்சிலருள் பௌஸியா அவர்களும் ஒருவர் என்பதற்கு இத்தொகுதி சான்று பகரும்.

இத்தொகுதியானது சிறுவர் பாடல் என்ற வரையறைக்குள் நின்றாலும் பௌஸியா அவர்களின் கவிதா ஆளுமையை இன்னும் அதைவிடக் கூடுதலாக விதந்துரைக்க முடியும்.

இன்னும் சொன்னால் அப்போது தினபதி கவிதா மண்டலத்திலே எங்களூர் என்ற தலைப்பிலே பல இளம் கவிஞர்கள் அவரவரின் ஊர்களைப் பற்றி விதந்தும் புகழ்ந்தும் எழுதி வந்தபோது நமது ஊரையும் அவ்வாறு விதந்தும் புகழ்ந்தும் எழுத ஒருவர் இல்லையா என்று சம்மாந்துறை மக்கள் அங்கலாய்த்த போது பௌஸியா அவர்கள் அந்தக் குறை பாட்டை நிவர்த்தி செய்தார். எங்களுக்கு அதன் தார்ப்பரியம் புரியாத காலத்திலே யே எங்கள் ஊரைப் பற்றியும் ஒரு கவிதை தினபதியில் வந்துள்ளது என்பதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தது மட்டுமன்றி அன்றில் இருந்து அவர்மீது ஒரு மதிப்பும் ஏற்படத் தொடங்கிற்று.

மேலதிகமாக, ஆசிரியர் கல்வியியலில் தேசிய ரீதியில் முத்திரை பதித்தவரும் கல்வி நிருவாக சேவையில் உச்சமான பதவிகளை வகித்தவரும் கல்வியியல் மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் சிறந்த ஆய்வாளராகவும் போற்றப்படுபவருமான கல்விமான் யூ.எல்.அலியார் அவர்களை வாழ்க்கைத்துணையாகப் பெறும் பாக்கியத்தையும் பௌஸியா அவர்கள் பெற்றுள்ளார். இந்த நீண்ட அறிமுகம் மணி ஆரம் சிறுவர் பாடல் படைத்துள்ள ஆசிரியரின் ஆளுமையையும் முதிசத்தையும் பதிந்து வைப்பதற்கு அவசியமானதாகும். அதன் பிறகுதான் இந்த தொகுதிக்குள் புகுவது பிரயோசனமாகும்.

பௌஸியா ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கற்பித்த அனுபவமும் அவரிடம் இயல்பாகவே அமையப் பெற்றிருந்த கவிதா ஆற்றலும் தமிழை அழகுறக் கையாள்வதில் உள்ள பாண்டித்தியமும் அழகிய இத்தொகுதி பிரசவமாகக் காரணமாக இருந்துள்ளன. மேலும் நான் முன்னர் குறிப்பிட்டதுபோல இவரின் மரபணுசார்ந்த இயல்பையும் சேர்த்துக் கொண்டே இத்தொகுதிய்யை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

இத்தொகுதியில் எல்லாமாக 42 பாடல்கள் தொகுக்க்ப்பட்டுள்ளன. சிறுவர் பாடல்கள் என்ற வரையறைக்குள்ளே இதிலுள்ள எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக அடக்கிக் கொள்ள முடியாது போனாலும் பெரும்பாலான பாடல்களை இணைத்துக் கொள்வதில் அதிகம் சிரமப்படத்தேவை யில்லை.

சிறுவர் பாடல்களைப் பொறுத்த அளவில் எல்லா மொழிகளிலும் மூன்று அம்சங்கள் பொதுவான பண்புகளாகக் காணப்படுகின்றன. அவை, பொருள், நடை, ஒத்திசைப்பு ஆகிய மூன்றிலும் இன்றியமையாதது அமைந்திருக்க வேண்டிய எளிமைத் தன்மையாகும். இப்படிக் கூறுவதற்குக் காரணம் இதன் பயன்பாட்டாளர்கள் பாலர்களும் சிறுவர்களும் என்பதனாலாகும். பொருள் நடை ஒத்திசைப்பு என்பனவற்றில் அதன் படைப்பாளி காட்டும் எளிமைத் தன்மையே அவ்விலக்கியத் துறையின் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றன. இன்னும் ஒருபடி மேலேபோய்ச் சொன்னால் சிறுவர் இலக்கியப் படைப்பாளியின் வித்துவத் தன்மை என்பதே மேற்படி அம்சங்களில் அவர் கையாண்டுள்ள எளிமைத் தன்மையே யாகும்

பௌஸியா அவர்களைப் பொறுத்தவரையில் இப்பாடல்களில் பிரக்ஞை பூர்வமாகவோ அல்லது அது அல்லாமலோ மிகுந்த கவனத்துடன் மேற்படி அம்சங்கள் எடுத்தா

எப்பட்டுள்ளன.பொருள் மற்றும் நடை ஆகிய இரண்டிலும் மிகக் கூர்மையாக இத்தன்மை கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இது வெற்றிகரமான சிறுவர் இலக்கியத் தொகுப்பு என எடுத்துரைப்பதில் யாரும் தவறுகாண முடியாது.

**மன்சூர் ஏ.காதிர்**
குலிஸ்தான்
அலி வன்னியா வீதி
சம்மாந்துறை- 09

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக
தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி **றமீஸ் அப்துல்லாஹ்**
அவர்கள் வழங்கிய மதிப்பீடு

Infant என்னும் ஆங்கிலச் சொல் Enfant என்னும் பிரான்ஸியச் சொல்லிலிருந்து உருவானதென்பர். அச்சொல்லின் ஆங்கில மொழி ரீதியான கருத்து பேசாதது என்பதாகும்.இந்தப் பேசாத குழந்தைகள் பேசுகின்ற நிலைக்கு வருகின்றபோது இசையும் பாடல்களும் விளையாட்டும் அவர்களிடம் பெரிய பாதிப்பினைச் செலுத்துகின்றது. அவர்களது வயது, மன வளர்ச்சி, மொழி ஆற்றல் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு சிறுவர் இலக்கியங்கள் ஆக்கப்படுகின்றன. சிறுவர் இலக்கியங்களின் தொடர்பு சிறுவர்களின் கல்வி வளர்ச்சியிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது.

தமிழிலக்கிய பாரம்பரியத்தில் நாட்டாரிலக்கிய மரபிற்குட்பட்ட சிறுவர் பாடல்களும் விளையாட்டுப் பாடல்களும் வேடிக்கைப் பாடல்களும் விடுகதைகளும் சிறுவர் இலக்கியத்தில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. இன்று அவையெல்லாம் நம் சிறுவர்களுக்கு தெரியாததாகிவிட்டன. செந்நெறி இலக்கிய மரபிலேயிருந்த ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியனவும் நம்மிடமிருந்து மெல்ல விலகிச் சென்றுகொண்டிருக்கின்றது. நவீன சிறுவர் பாடலுக்கு அடிப்படையாய் அமைந்த பாரதியாரின் பாப்பா பாடல்கள் முதலானவை அவ்வப்போது சிலரால் ஞாபகமூட்டப்படுகின்றன.

ஈழத்தில் குழந்தைகளின் அபிநயப் பாடல்களைக் கொண்டு திரு.சு. வைத்தியநாதன் தமிழ்ப் 'பாலபோதினி' (1918)யை வெளியிட்டார். அதற்குப் பின்னர் க.அருள்நந்தி என்பவர் 'பிள்ளைப் பாட்டு' (1935)த் தொகுதியை வெளியிட்டார். சோமசுந்தரப் புலவர் முதலானவர்களின் பாடல்களை நாம் இதன் மூலமே அறியக் கிடைத்தது. பின்னர் அதிக பிரபல்யம் பெற்ற வேந்தனாரின் பாடல்கள் இன்று

'குழந்தைமொழி' என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகின்றது.

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா
.....................................

பறவைக் குஞ்சைப் பாரண்ணா
பறவைக் குஞ்சைப் பாரண்ணா
பறக்கும் இறகு முளைத்திடாத
பறவைக் குஞ்சைப் பாரண்ணா

முதலான அவரது சிறுவர் பாடல்கள் எல்லாம் நம் நெஞ்சை விட்டு இன்னும் அகலவில்லை. 70, 80களில் ஆரம்ப வகுப்பு தமிழ்ப்பாடப் புத்தகங்களில் வேந்தனாரின் இந்தப் பாடல்கள் நமக்கு அறிமுகமாயின. இப்பாடல்களில் உள்ள ஓசை நயமும் காட்சிப்படுத்தலும் விழுமியக் கருத்துக்களும் இசையோடு பாடும் திறனுமே இந்த நீண்ட நெருக்கத்தை நமக்குள் இன்னும் நிலவச் செய்திருக்கின்றது. இவையே சிறுவர் பாடலுக்குரிய மிக முக்கியமான பண்புகளாகும்.

பொதுவாகச் சிறுவர் பாடல்களை ஆக்குவது மிகச் சிக்கலான முயற்சியாகும். சிறுவர் பாடல்களை ஆக்கிய பெரும் புலவர்கள் கூட சில அரும்பதங்களில், கடினமான சொற்புணர்ச்சிகளில், போதனைக் குறைபாடுகளில், இசையோட்ட சிக்கலில் சிக்கவே செய்துள்ளனர். இவ்வாறான ஒரு கடினமான காரியத்தைச் சாதிப்பதில் 'மணி ஆரம்' ஆசிரியர் பக்கீர்த்தம்பி பௌஸியா அலியார் அவர்கள் அக்கறை செலுத்தியிருக்கிறார்.

இவர், "மேகம் என்பது மூன்று காரியங்களைச் செய்யும்.: ஒன்று மின்னும், இரண்டு முழங்கும், மூன்று பொழியும். அது காளமேகமாக இருந்தாலும் சரி, ஈழமேகமாக இருந்தாலும் சரி. இந்த மூன்று காரியங்களையும் செய்தே ஆகவேண்டியதுதான்".

என தினபதி பத்திரிகை ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் குறிப்பிடும் ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் ஒரே புதல்வி. பிரபலமான எழுத்ததாளர் - கல்வியாளர் யூ.எல். அலியார் அவர்களின் மனைவி. ஆரம்பக் கல்வி ஆசிரியையாக நீண்ட காலம் சேவையாற்றியவர். எழுதுவதற்கான வீட்டுச் சூழலும் அவருக்கு வாய்த்திருக்கிறது. மொத்தத்தில் ‘மணி ஆரம்’ படைக்க அவர் முற்றிலும் ஆற்றல் பெற்றவர்.

சிறுவர் பாடல்களுக்குரிய பொருள் மரபிலிருந்து அவர் பெரிதும் விலகிச் செல்லவில்லை. அன்னை, ஆசான், சிறுவர் எனப் பாடும் அவர் நாடு, ஊர் எனவும் இயற்கையையும் பறவையையும் கண்கொள்ளாக் காட்சிகளையும் பாடியதோடு காலத்துக்கேற்ற கண்டுபிடிப்புக்களையும் பாடி சிறுவர் மனங்களில் புதிய எண்ணக் கருக்களையும் அரும்பச் செய்துள்ளார்.

இப்பாடல்களில் ஆங்காங்கே அரும்பதச் சொற்களைப் பயன்படுத்தியபோதும் அவை பயில்வதற்கு உதவுவனவாகவே அமைகின்றன. நற்போதனையை ஊட்டுவதோடு பயனுள்ள சுகாதார, விஞ்ஞானக் கருத்துக்களையும் பல பாடல்கள் ஊட்டுகின்றன. பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி ஆரம்பநிலைப் பாடசாலை பிள்ளைகளுக்கும் பயிற்சிக்கு உதவும் பல பாடல்கள் இத்தொகுதியுள் உள.

ஆரம்ப நிலைப் பிள்ளைகளுக்கு தமிழ் மொழி எழுத்துக்களை பயிற்றுவிப்பதில் ர, ற, ல, ள, ழ, ன, ண கர வேறுபாடுகள் மிக முக்கியமானவை. அத்தகைய பயில்வினை வேந்தனார் போன்ற பெரும் புலவர்களின் பாடல்களில் காணலாம்.

அதேபோல இந்த வேறுபாடுகளை சுட்டுவதாக அமைந்த பௌஸியா அலியாரின் ‘மழலை மொழி’ என்ற பாடல் மிகு கவனத்துக்குரியது.

குழலையும் யாழினையும் வென்ற மொழி
மழலை குழந்தையின் முதன் மொழியாம்
அழகு நடை பழகு மொழி அன்புடனே
அனைவரையும் கவர்ந்திழுக்கும் அரியமொழி

குறும்புகளைச் செய்துவிட்டு அப்பாவியாய்
குறுநகையால் முகம் நோக்கும்போது
கரும்பு பாகாய் பெரியவரை மயக்கிவிடும்
கனவிலும் மறக்கவொண்ணா மழலை மொழி

என்று நல்ல பாடல்களை யாத்த பௌஸியா அலியாரின் முயற்சி பாராட்டத் தக்கது. ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் அவர் பணியும் பேசப்படத்தக்கதாக அமைய இத்துறையில் இன்னும் அவர் பலவற்றைச் சாதிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

Dr. றமீஸ் அப்துல்லாஹ்
தலைவர்,
மொழித்துறை
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்.

## என்னுரை

எனது கன்னி முயற்சியாக உங்களின் கரங்களில் தவழும் இச்சிறு நூலில் சிறுவர் உணர்வுகளுடன் ஒன்றிவிட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. என்னுடைய நீண்டகால ஆசிரியர் சேவை இந்நூலாக்கத்துக்கு உதவியாக அமைந்தது.

பள்ளிக்குள் பிரவேசிக்கும் பாலர் முதல் சிறுவர் வரை அவர்களின் அனுபவ முதிர்வினைக் கருத்திற் கொண்டு அவர்கள் அறிந்த அறியவுள்ள விடயங்களை உள்ளடக்கி யதாக நூல் வடிவமைககப்பட்டுள்ளது. அவர்கள் ஆசிரியர்களின் துணையுடன் இசைக்கக் கூடியவாறு அவை பாடல்களாக ஆக்கப் பட்டுள்ளன. இப்பாடல்களினூடே இலகுவான எண்ணக் கருக்களை மாணவர் அறியக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. சுற்றாடல் சார் அறிவுக்கும் மொழிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் இந்நூலை ஆசிரியர் பயன்படுத்த முடியும்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய முதுநிலைக் கவிஞர் மன்சூர் ஏ. காதிர் அவர்களுக்கும் வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் மதிப்பீட்டுரை தந்துதவிய கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் அவர்களுக்கும் அறிமுகம் செய்த அதிபர் ரீ. எம். தௌபீக் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், கணினிப் பதிவினை மேற்கொண்டு நூலை வெளியிட்டு உதவிய பைத்துல் ஹிக்மாஹ் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி என்றும் உரித்தாகட்டும்.

மேலும் இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் என் எழுத்து முயற்சிகளை ஊக்குவிக்கும் ஆசிரியர்கள் அபிமானிகளுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள் உரித்துடையன.

**பௌஸியா அலியார்**

## வைப்பு முறை

பக்

நூல் முகம் .. .. .. i

நூல் விபரம் .. .. .. ii

சமர்ப்பணம் .. .. .. iii

வெளியீட்டுரை .. .. .. iv

அணிந்துரை .. .. .. v

மதிப்பீட்டுரை.. .. .. ix

என்னுரை .. .. .. xiii

அறிமுகம் (பின்னட்டை) .. .. xv

பாடல்கள்

1. இறைவனைப் புகழ்வோம் .. 1
2. இறுதித்தூதர் முகம்மது நபி(ஸல்).. 2
3. நம் நாடு .. .. 3
4. சம்மாந்துறைத் தாயகம் .. 4
5. அன்னை .. .. 5
6. மழலை மொழி .. .. 6
7. இயற்கை எழில் .. .. .. 7
8. நல்லாசான் .. .. .. 8
9. பள்ளிச் சிறுவர் .. .. .. 9
10. சுகவாழ்வு .. .. .. 10
11. சிட்டுக் குருவி .. .. .. 11
12. ஒன்றுபடுவோம் .. .. .. 12
13. எண்கள் .. .. .. .. 13
14. கைவிரல்கள் .. .. .. 14
15. பழங்கள் .. .. .. .. 15
16. வண்ணத்துப் பூச்சி .. .. 16
17. உழவுத் தொழில் .. .. 17

18. மழைநாள் .. .. 18
19. செல்லப் பிராணி .. .. 19
20. கடிகாரம் .. .. .. 20
21. ஆகாயம் .. .. .. 21
22. தொலைக்காட்சி .. .. 22
23. பள்ளி விடுமுறை .. .. 23
24. ஊஞ்சல் ஆடுவோம் .. .. 24
25. கடற்கரையினிலே .. .. 25
26. கணணி .. .. .. 26
27. தொடர் உந்து .. .. .. 27
28. நல்ல பழக்கங்கள் .. .. 28
29. விளையாட்டு .. .. .. 29
30. கா..கா..காக்கையாரே .. .. 30
31. மிருகக் காட்சிச் சாலை .. 31
32. நிலைக் கண்ணாடி .. .. 32
33. துறைமுகம் .. .. .. 33
34. தபாற்காரன் .. .. .. 34
35. இரப்போர்க்கு இரங்குவோம் .. 35
36. வானூர்தித் தளம் .. .. 36
37. மீன்காரன் .. .. .. 37
38. பூந்தோட்டம் தரிசிப்போம்.. .. 38
39. நோன்புப் பெருநாள் .. .. 39
40. வீட்டுத் தோட்டம் .. .. 41
41. எங்கள் வீட்டுப் பிள்ளை .. 42
42. நேயம் மிக்க பள்ளி. .. .. 43

1

## இறைவனைப் புகழ்வோம்



அளவிலா அருள் செய்பவனே
நிகரிலா கருணை நிறைந்தவனே
சர்வ புகழின் தயாநிதியே
அகிலமதைப் படைத்து போஷிப்பவனே
இரட்சகனே இணையற்ற இறைவா
தீர்ப்புநாளில் மாபெரிய நீதிபதி
அனுதினம் போற்றி வணங்குகிறோம்
உன்னுதவி தேடியே வாழுகின்றோம்
எம்மை நேர்வழியில் செலுத்திடுவாய்
உன்னருள் பெற்ற நல்லவர் வழியிலே
உன் கோபம் பெற்றவர் வழியும்
தவறான வழியும் தவிர்த்திடுவாய் !

2

## இறுதித் தூதர்
## முகம்மது நபி (ஸல்)

அன்னையார் ஆமினா வயிற்றினிலே
அப்துல்லாஹ் தந்தை மகனாக
அகிலத்து அருளாகப் பிறந்தாராம்
அல்அமீன் சிறப்பாய் வாழ்ந்தாராம்

கற்புக்கரசி கதீஜா நாயகியின்
கரமே பற்றி வளம் பெற்றார்
நாற்பது வயதில் நபியாக
நானிலம் முழுவதும் அருளானார்

தீனைப் பரப்ப திடம் கொண்டார்
துணையாய் அபூபக்கர் இணைந்தாரே
கல்லால் சொல்லால் வருந்திடினும்
கடமையில் எதையும் பொறுத்தாராம்

ஐங்காலத் தொழுகை நோன்பினையும்
அருட்கொடையாகப் பெற்றாராம்
உயர் குணம் படைத்த நாயகராம்
உயிரையும் மதியாத உத்தமராம்

எழுத அறியா உம்மி நபி
இறையருள் மழையில் நனைந்தாரே
அழுதார் உம்மத் உயர்வுறவே
அவரின் புகழைப் பாடிடுவோம்

3

# நம் நாடு

இலங்கை எமது தாய் நாடாம்
இனிய வளம் நிறை நன்னாடாம்
இந்து பௌத்தம் இஸ்லாம் கிறித்தவம்
என்னும் மதங்கள் இங்குளவாம்.

தேயிலை இறப்பர் தென்னையுடன்
செந்நெல் வளமும் மிக்கதுவாம்
வங்கக் கடல்சூழ் பசுந்தீவாம்
மலைத் தொடர் மத்தியில் உள்ளதுவாம்

நந்த வனங்கள் நிறைந்ததுவாம்
நந்நீர் நதியும் ஆழ்கடலும்
அந்நியர் வரவைக் கவர்ந்துள்ளதாம்
அமைதிப் பூங்கா நம் நாடாம்

மனதைக் கவரும் நம்நாடு
மாங்காய் போன்ற வடிவினதாம்
மத்தியில் மலைகள் குளிர்ச்சி தரும்
மகாவலி நதியும் பாய்ந்தோடும்

பள்ளிகள் பல்கலைக் கழகங்கள்
பாடி ஆடிட அருங்கலைகள்
செல்வம் பெருக்கும் துறைமுகங்கள்
வரலாற்றுச் சின்னம் பலவுண்டு

# 4 சம்மாந்துறைத் தாயகம்



எங்கள் தாயகம் அழகியதாம்
எல்லை கடந்த பெருமையதாம்
எங்கும் பசுமை பரந்துளதாம்
எல்லார் வாயிலும் பேசுவதாம்



வந்தாரை வாவென்று வாழவைக்கும்
வளங்கள் நிறைந்த ஊரதுவாம்
சங்கை மிகுந்த மக்கள் பதியாம்
சம்மாந்துறையே அதன் பேராம்



பச்சைப் பசேலென பரந்த வயல்
பாங்காய் பசிய சோலைகளாம்
பள்ளிவாசல் பல உளவாம்
இறைநேசர் இல்லங்களின் ஊரதுவாம்



கல்விக் கூடங்கள் ஏராளம்
கலைமிகு உயர்கல்வி தொழில்நுட்பம்
பல்கலை விஞ்ஞானம் பயிற்சிகளும்
பதவி நிலை அறிஞர்களும் தாராளம்



ஆன்மீக நெறியில் ஈடுபடும்
ஆலிம்கள் பயிலும் கலைக் கூடம்
வான்மறை மனனப் பயிற்சிகளும்
வாண்மைக் கலைகளும் உள்ளதுவாம்



# 5 அன்னை



பத்துமாதம் சுமந்தெடுத்து
பகலிரவாய்க் கண்விழித்து
நித்தமும் எம்துயர் துடைத்து
நேசம் மிக்க அன்னை அவள்

எம் உடம்பில் ஈயெறும்பு
ஏதேனும் கண்டுவிட்டால்
தன் நிலை கலங்கிடுவாள்
தாவி எம்மை அணைத்திடுவாள்

வீட்டில் குழந்தை செய்கின்ற
வினோதம் மிக்க குறும்புகளை
மீட்டியே முத்தம் தந்து
அள்ளி அணைக்கும் தாயாவாள்

உடலில் சூடு கண்டாலே
உயிரை மாய்த்து இயங்கிடுவாள்
கண்ணை இமை காப்பதுபோல்
கணமும் அவள் காத்திடுவாள்

# 6 மழலை மொழி

குழலையும் யாழினையும் வென்ற மொழி
மழலை குழந்தையின் முதன்மொழியாம்
அழகுநடை பழகு மொழி அன்புடனே
அனைவரையும் கவர்ந்துவிடும் அரியமொழி

கவலைகளை மறக்குமாறு செய்யுமொழி
கற்கண்டாய் களிப்பூட்டி சிரிக்கவைக்கும்
மலருகின்ற புதுமலர்கள் ஒலிக்கும் மொழி
மனதினிலே மதுவூறும் மதுர மொழி

சொற்களைப் பிரித்துக் கூறும் பாங்கு
சொர்க்கத்துக்கு எம்மை கூட்டிச் செல்லும்
பற்களை இடையிடை திறந்துகாட்டி
பரவசத்தில் எம்மை ஆழ்த்தி விடும்

பாரிலுள்ள மொழிகளை நாம் கற்றிடலாம்
பச்சைக் குழந்தையின் மழலையை எப்படி?
சிரிப்பூட்டி எம்மை நகைத்திட்டாலும்
சிந்தனைக்கு விருந்தாகும் பாணி அது

குறும்புகளைச் செய்துவிட்டு அப்பாவியாய்
குறுநகையால் முகம் நோக்கும் போது
கரும்பு பாகாய் பெரியவரை மயக்கிவிடும்
கனவிலும் மறக்கவொண்ணா மழலை மொழி

7

# இயற்கை எழில்

இயற்கை தந்த எழில் எல்லாம்
இறைவன் ஒருவனின் படைப்புக்களே
இம்மை மறுமை எல்லாமே
அவன் ஒருவனின் தன்னாட்சி

கடலும் நீர்நிலை சோலைகளும்
காற்றும் மழையும் கான் குளிரும்
உடலும் உள்ளே இருப்பவையும்
உயர்ந்த இறைவன் அருளாமே

மரம் செடி கொடி பூண்டுகளும்
மனிதன் பயன்பட படைத்தவனும்
நிலமுடன் நீர்த்தரை மலைகளுமே
மனதைப் பறிக்கும் படைப்புக்களே

வானியல் புதுமைகளும் கண்கவர்
கடலோரக் காட்சிகளும் மீனினமும்
கானகத்து மிருகங்கள் பறவைகளும்
இறைவன் வடிவமைத்த எழிலன்றோ !

# 8 நல்லாசான்



ஆசான் நல்ல ஆசானாம்
அறிவை ஊட்டும் ஆசானாம்
பேசும் மொழிகளை எமக்கூட்டி
பெருமை கொள்ளச் செய்திடுவான்

எழுத்தறிவித்த இறைவனை அடுத்து
ஊட்டி வளர்த்தவன் ஆசானாம்
கல்விக் கண்ணைத் திறந்தவன்அவனே
கருணைக் கடலும் அவனேதான்

தாயின் மடியில் தவழ்ந்த எம்மை
தரமிகு கல்வியொடு ஒழுக்கம் பயில
சேயாய் எம்மை சேர்த்து வைத்து
சீர்பெற எமக்கு சிறப்பை ஊட்டினார்

ஆசிரியன் அளவிலா சேவையினால்
ஆக்கும் மூளைசாலிகள் நூறு
நூறும் சேர்ந்து முனைந்தாலும்
ஆசிரியர் ஒருவரை ஆக்க வொண்ணா

குற்றம் செய்தால் கடிந்திடுவார்
குறும்பு செய்தால் நகைத்திடுவார்
மற்றவர்க் கில்லா மாமகிமை
மாநிலத்தில் ஆசிரியர் ஒருவருக்கே.

# 9 பள்ளிச் சிறுவர்

பள்ளிப்பையைத் தோளில் தூக்கி
பக்குவமாய் பாதை ஓரம்
துள்ளியோடும் சிறுவர்களே
சற்று நின்று கேளுங்களேன்



ஆசிரியர் சொல்லித் தருகின்ற
அருமையான அறிவுகளை
காசு பணத்தால் பெற முடியா
கண் எனப் போற்றி நடந்திடுவீர்

புத்திமதிகள் கேட்டிடுவீர்
புறத்தே தள்ளி ஓடாதீர்
பத்திரமாகப் புத்தகத்தை
படித்தே பயன் பெற்றிடுவீர்



மாரி காலம் வந்துவிட்டால்
மனங் கொண்ட மகிழ்ச்சியுடன்
குடையைப் பிடித்துக் குதூகலமாய்
குடுகுடு எனவே சென்றிடுவீர்

சின்னஞ் சிறிய சிறார் நீங்கள்
சீராய் என்றும் ஒழுகிடுவீர்
பின்னொரு காலம் நீங்களே
தலைமைப் பிரசை ஆவீர்கள்

10

# சுகவாழ்வு



சுத்தமாய் வாழ்ந்திட்டால்
சுகம் தானே ஓடிவரும்
நித்தம் இதைப் பேணிவந்தால்
நிம்மதியாய் வாழ்ந்திடலாம்

வீட்டையும் சூழலையும்
வீணான குப்பை நீக்கி
நாட்டையும் நகரையும் நல்
நாகரிக மயமாக்குவோம்



நித்தமும் உடல் அழுக்கை
நீர் கொண்டு போக்கிடுவோம்
அழுக்கான ஆடை முழுவதையும்
அழுத்தி துவைத்துக் கழுவிடுவோம்



மூன்று வேளை உணவுகளை
முறையாகச் சாப்பிடுவோம்
ஐவேளைத் தொழுகைகளை
அனுதினமும் பேணிடுவோம்

ஓடிவிளையாடி சோம்பலின்றி
உடலைப் பேணி வாழ்ந்திடுவோம்
ஆடிப்பாடி உளம் ஆற
அமர்ந்து இருந்து ஓய்வெடுப்போம்

11

# சிட்டுக் குருவி



சின்னச் சின்ன குருவியே
சிறகடிக்கும் குருவியே
என்ன துணிவிருந்தால்
எந்தன் உணவை உண்டிடுவாய்

உழவர் பட்ட துயரமெல்லாம்
உணரமாட்டாய் குருவி நீ
களவாய் வந்து கணக்கின்றி
கவர்ந்து கொள்ளல் முறையாமா?

ஆகாய வெளி எங்கும்
அலாதியாய் பறந்தேநீ
வயிறாரத் தீனி பெற
அழகுச் சிறகு துணையாமே

ஆடியசையும் கூட்டினிலே
ஆனந்தமாக வாழும்நீ
பாடிப் பறந்து விளையாட
பயிற்சி எப்படி பெற்றாயோ





# எண்கள்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஊர்ந்து திரியும் வண்டு

இரண்டும் இரண்டும் நாலு
மனிதனுக்கு இரண்டு காலு

மூன்றும் மூன்றும் ஆறு
முத்துச் சம்பா சோறு

நாலும் நாலும் எட்டு
நாக்குச் சுவைக்கு லட்டு

ஐந்தும் ஐந்தும் பத்து
அறிவு எங்கள் சொத்து

எண்ணை எண்ணிப் பாடு
பாடிப் பாடி ஆடு



# 13



# ஒன்றுபடுவோம்


ஒன்றுபடுவோம் வென்றிடுவோம்
ஒருமித்தே பலம்பெறுவோம்
இன்றிலிருந்தே இணைந்திருப்போம்
இன்பமாக வாழ்ந்திடுவோம்

காக்கைக் கூட்டம் நமக்குத்தரும்
கருத்துமிக்க படிப்பினையாம்
நீக்கிடுவோம் கபடத்தனம்
நிறைந்திடுவோம் நேர்மையாக



வீட்டில் ஒற்றுமை பயிர் விதைத்து
வெற்றியை நாமே பெற்றிடுவோம்
நாட்டில் நன்றாய் இனங்களிடை
நட்பாய் நாளும் பழகிடுவோம்

ஒன்றுபட்டால் வாழ்வுண்டு
உண்மை யதனை உணர்த்துவமே
நன்று செய்து நலம்பெறவே
நாம் துணிவைப் பெறுவோமே



14

# கைவிரல்கள்



கைவிரல் ஐந்தும் தம்புகழ்பாட
காரமாய் ஒன்று சேர்ந்தனவே
மெய்யாய் தாமே பெரிதெனக்கூறி
பெருமை கூறி மகிழ்ந்தனவே

கட்டைவிரலோ கவிதை எழுதும்
காரியம் ஆக நானுதவி என
சுட்டுவிரலோ தன்புகழைச்
சுட்டிக் காட்டி நீட்டியது

மூன்றாம் விரலோ நடுவிரலாய்
முந்தி நிற்பேன் எனக்கூற
நாலாம் விரலோ நயந்ததுவே
நவமாய் மோதிரம் அணிந்திடுவேன்

ஐந்தாம் விரலோ அலறியது
அனைத்திற்கும் காவலன் நானேதான்
எல்லா விரலும் தத்தம் பணிக்கு
இன்றியமையா ஆயுதமே.

15

# பழங்கள்



வாழைப்பழமோ ஏழைப்பழம்
வயிறு நிறைய உண்டிடலாம்
கோழிக்கோடு கதலி எதர என
கணக்கிலா வகையில் அப்பழமே

மாம்பழம் நல்ல தீம்பழமாம்
மாமரம் ஈந்து தந்திடுமே
முக்கனிகளில் முதன்மையதாம்
தெவிட்டாத தீங்கனியாம்

கொய்யாக் கனியும் சுவைத்திடுவோம்
பப்பாசியையும் பதம் பார்ப்போம்
பலாச்சுழை வாயை நிறைத்துவிடும்
பலவகைச் சுவைகள் தந்திடுமே

தோடம்பழமோ தொல்லை நீக்கும்
தேடியே வாங்கி பருகிடுவோம்
அப்பிள் பழமோ அதிக சுவை
திராட்சைப் பழமோ தெவிட்டாது.

16

# வண்ணத்துப் பூச்சி



வண்ணத்துப்பூச்சி வண்ணத்துப்பூச்சி
எங்கே செல்கிறாய்
வட்டமிட்டு வட்டமிட்டு
யாரைத் தேடுகிறாய்



சின்னஞ்சிறுசுகள் உன்னைப்பிடிக்க
திட்டம் போடுதே
உன்னில் காணும் வண்ணங்களை
எண்ணியவர் மனம் நாடுதே



சிவப்பு மஞ்சள் நீலம் என
பலவண்ணம் பகட்டான
பட்டணிந்து பளபளக்க
பகட்டாக வந்ததேனோ?

சோலைப் பூக்களின் தேன்குடித்து
சொகுசாக வாழ்கிறாயே
காலையிலும் மாலையிலும் எம்
கண்களுக்கு விருந்தாகுமே

17

# உழவுத் தொழில்



உழவுத் தொழிலே உயிர்த்தொழிலாம்
உயிரினம் வாழத் துணை செய்யும்
புராதனத் தொழிலாய் வழிவந்த
புண்ணியம் தரும் தொழிலாமே



உழவன் சேற்றில் கால் வைத்தால்
உணவில் நாமெல்லாம் கைவைப்போம்
உடலை வருத்திப் பாடுபடும்
உழவன் உலகின் உழைப்பாளி

மழை வெய்யில் புழுதியும் பனியும்
உணவாயுண்டு சிரமம் தாங்கி
மானுடம் காக்கும் அவன்பணி
மகத்துவம் நன்கு நிறைந்ததுவாம்



சேற்றில் புதைந்து சீராய் விதைத்து
செந்நெல் ஈந்திடும் அவன்பணி
வேற்றுத் தொழிலிலும் போற்றத்தகு
ஏற்றம் பெற்று விளங்கிடுதாம்

18

# மழை நாள்



வானம் பரந்து இருளத் தொடங்கியது
வளியின் வேகம் சடுதியாய் உயர்ந்தது
பாணம் எனக்கூதல் வாட்டியது
கன்னங்கரேல் எனக் கறுத்தது

முழக்கம் நெஞ்சைக் கலக்கியது
முகங்களில் வாட்டம் காண
மின்னல் பளிச்செனக் கீற
உள்ளம் ஆடி நடுங்கியது

எங்கிருந்தோ வந்த சண்டமாருதம்
ஓங்கி நின்ற மரங்களையும்
பழங்கள் தாங்கிய பலாமரத்தையும்
பதம்பார்க்கத் தொடங்கியது

சட்டச்சட சட்டச்சட சடார்
சத்தம் செவிகளைத் துளைக்க
கொட்டு கொட்டென கொட்டியது மழை
கொடுகிக்கொடுகி நின்றனர் மக்கள்



19

# செல்லப் பிராணி



வீட்டில் வளரும் பிராணியாம்
விளையாட நல்ல பிராணியாம்
ஓட்டம் ஓடித்திரியுமாம்
ஒளிந்து ஒளிந்து பதுங்குமாம்



நாயைக் கண்டால் சீறுமாம்
நலிந்து மெலிந்து ஓடுமாம்
பாயப் பதுங்கி மறையுமாம்
பயந்து பயந்து நடுங்குமாம்



மியாவ் மியாவ் என்று பாடி
மெதுவாக எலியைத் தேடி
பக்குவமாய் பதுங்கி அதை
படாரெனவே கௌவுமாம்



எங்கள் வீட்டு செல்லப் பிராணி
அன்புடன் அரவணைக்கும் பிராணி
துன்பம் அதற்கு வந்திடாமல்
துணைபுரிந்து காத்திடுவோம்.

20

# கடிகாரம்



காலம் அதனை அளந்திடுமாம்
கணப் பொழுதைக் கடந்திடுமாம்
நேரமதை நமக்குணர்த்தி
நேராய் வாழ்வில் கலந்திடுமாம்

காரியம் வென்றுதரும் சாதனமாய்
கனவிலும் அதுவே வழிகாட்டும்
பெரிய சிறிய வேலைகளை
பாங்காய் முடிக்க வழிகாட்டும்

கடினமான காலத்தில் காரியத்தை
கச்சிதமாய் முடித்துவைக்க
கடிகாரம் வாழ்வின் முன்னோடி
கடமை தவறா கருவியது

சிறிய முள் பாய்ந்து செல்ல
கட்டை முள் பொறுமை கொள்ளும்
சிறியவர் ஓட்டம் கண்டு
பெரியவர் அமைதி கொள்வார்

21

# ஆகாயம்

வானைப் பாருங்கள் பாலர்களே
வண்ணமான விண்மீன்கள்
ஏனோ கண்ணைச் சிமிட்டிறதே
இங்கிதமாய் ஒளிர்கிறதே

வட்ட நிலாவைப் பாருங்கள்
வானில் உலா வருகிறதே
கிட்ட வந்தால் தொட்டிடலாம்
கீழ் வானம் சென்றிடலாம்

உலகை சுற்றிவரும் சூரியனும்
உஷ்ணம் தந்து உறைக்கின்றான்
வெப்பம் தணிக்க மேகங்கள்
குடையாய் வந்து மறைக்கின்றான்

உயரப் பறக்கும் பருந்துகளோ
வானைத் தொட்டு பார்க்கிறதே
வான்வழி செல்லும் வானூர்தி
வடிவில் சிட்டாய்ப் பறக்கிறதே


22

# தொலைக்காட்சி




நாளும் பொழுதும் தொலைக்காட்சி
நட்பாய் வந்து சேர்ந்துள்ளதே
வாழும் நாட்டின் தகவல்களுடன்
அந்நியர் தகவல்களும் தருகிறதே

வேலைப்பழுவின் விசனம் போக்கி
விருப்புடன் பொழுதைப் போக்கிறதே
மேலைநாட்டு புதினங்களும்
மேலாய் அள்ளித் தருகிறதே



குட்டிச்சிறுவர் குதூகலிக்க
குறுங்கதைகள் நாடகங்கள்
சுட்டிக் கதைகளும் குறும்புகளும்
சுவையுடன் கலந்து தருகிறதே

பத்திரிகைச் செய்தி முதல்
பரவலான செய்திகளையும்
நித்தம் எமக்கு ஒளிபரப்பி
நீண்ட சேவை செய்கிறதே



வானிலை தகவல்கள் நில அதிர்வுகள்
வருமுன் காக்கும் அறிவுறுத்தல்
மெய்நிலை கூறும் செய்திகளை
பயனுறக் கூறும் தொலைக்காட்சி

# 23

# பள்ளி விடுமுறை



பள்ளிக்கூடம் விடுமுறையாம்
பாடி ஓடி விளையாடிடலாம்
எல்லா வேளையும் வீட்டினிலே
இன்பமாக இருந்திடலாம்

மாமா வீட்டுக்கு சென்றிடலாம்
மகிழ்வுடன் விருந்தினை உண்டிடலாம்
ஊரைச் சுற்றிப் பாத்திடலாம்
உறவினர் வீட்டைப் பார்த்திடலாம்



பள்ளி வேலைகள் மறந்திடாது
பாடங்களை நாம் பார்த்திடுவோம்.
சொல்லித் தந்த அறிவுரைகளை
சிரமேற் கொண்டு ஒழுகிடுவோம்

பெற்றார் உற்றார் வேலைகளில்
பொறுப்புடன் நாமும் இணைந்திடுவோம்
மற்றவர் கண்டு பெருமைப்பட
மண்ணில் வாழ்க்கை நடத்திடுவோம்



# ஊஞ்சல்



ஊஞ்சல் ஆடி மகிழ்ந்திடுவோம்
ஒய்யாரமாகவே ஆடிடுவோம்
பாயப் பாயப் பறந்திடுவோம்
பண்ணை இசைத்துப் பாடிடுவோம்



சுற்றி சுற்றி ஆடிடுவோம்
சுதந்திரமாக ஆடிடுவோம்
சோர்வு நீக்கி ஆடிடுவோம்
சுகமே வாழ ஆடிடுவோம்

அந்தரத்தில் ஆடும் பாலர்கள்
அச்சம் மேலிட கதறுவரே
சந்திரன் நம்முடன் சேர்ந்து வரும்
பகலவன் நம்மைச் சுட்டெரிக்கும்

பெருநாளை பெருமையாக பாடி
உயர உயர ஆடிடுவோம்
பலகாரம் பரிமாறி ஆடுவோமே
பண்பு மேலோங்க ஆடுவோமே

25

# கடற்கரையினிலே



கடற்கரைக்குச் சென்றிடலாம்
காற்றை நன்றாய் சுவாசிக்கலாம்
வலையிழுக்கும் மீனவர் தம்
மீனைப் பார்த்து ரசிக்கின்றார்




கால் கழுவும் சிறுவர்கள்
அலையைப் பார்த்து ஓடுகிறார்
காலைப் புதைத்து விளையாடுகிறார்
கவலைகளை மறக்கின்றார்



மண் குவிக்கும் சிறுவர்கள்
மலைபோல் அதனைக் குவிக்கின்றார்
மண் வீடு கட்டுகின்றார்
அலைகள் அதனைச் சிதைக்கின்றதே

பெரியவர்கள் ஓரிடம் சேர்ந்திருந்து
அரட்டை அடித்து மகிழ்ந்திருக்க
சிறியவர் ஒருவரை யொருவர்
சிரித்தே ஓடிப் பிடிக்கின்றார்



26



# கணினி

கணினி என்றொரு கருவியதாம்
அறிவியல் தந்த பொக்கிஷமாம்
கனநாள் செய்யும் வேலைகளை
கணப் பொழுதில் தானே செய்துவிடும்

சிறியவர் முதல் பெரியோர் வரை
எழுதுகோல் கடதாசி எதுவுமின்றி
எண்ணங்களை எழுத்தில் வடித்திடவும்
சேமித்து காத்தலும் அதிலுளதாம்


மின்னஞ்சல் மூலம் கடிதங்களை
மின்னலாய் அனுப்பி பதில் பெறவும்
தூரதேச உறவினர் பேசிடவும்
துணையாய் கணினி வழியமைக்கும்

இணையம் என்ற இணையிலா நுட்பம்
இருந்த இடத்தை நகராமல்
கணத்தில் உலகைச் சுற்றி
காரியம் ஆற்ற துணை செய்யும்



27

# தொடர் உந்து



ஒன்றன் பின் ஒன்றாய் அடுக்கி
ஓ வென்ற ஓசை எழுப்பி
காற்றின் கடுகதியில் ஓடுகின்ற
தொடருந்து வண்டி அதோ!




தொலைவிடம் செல்லத் துணையாக
மக்கள் திரளாய் ஏறியதில்
தொல்லை அகலப் பயணமாகும்
தொடரான வண்டி அதோ!



ஆசனத்தில் அருகருகே அமர்ந்திருந்து
அளவளாவி மகிழ்ந்து மக்கள்
போசனம் உண்டு உரையாடி
பொழுதை இனிதே கழித்திடுவர்

இடையிடை நடுநடுங்கி ஓசையுடன்
இறங்கியேறும் வசதிக்காய் நிற்கும்
தடை ஏதுமின்றி வியாபாரிகள்
நடமாடி சிற்றுண்டி விற்பார்கள்



# 28 நல்ல பழக்கங்கள்



அதிகாலையில் எழுந்திடுவோம்
அம்மா சொல்லைக் கேட்டிடுவோம்
புதிய நாளின் கடமைகளை
புரிந்தே நாமும் செய்திடுவோம்



பள்ளிக் கூடம் சென்றிடுவோம்
பாடம் எல்லாம் கற்றிடுவோம்
நல்ல நல்ல நண்பருடன்
நாளும் நாங்கள் பழகிடுவோம்



ஆசிரியர் எங்கள் வழிகாட்டி
அரிய அறிவினை அள்ளித்தரும்
சீரிய ஒழுக்கம் காட்டித்தரும்
சிற்பியாம் அவரைப் போற்றுவமே



மாலை நேரம் விளையாடி
மகிழ்ச்சி பொங்க வாழ்ந்திடுவோம்
வேலையில் பெற்றார்க் குதவி
பாடம் மீட்டு படித்திடுவோம்



பெற்றார் முதியோர் இரப்போர்க்கு
பொறுப்பாய் என்றும் உதவிடுவோம்
சற்றும் சளைக்காது கருணையுடன்
இறைவன் படைப்பினை பேணிடுவோம்

# 29 விளையாட்டு



பாலர் நாங்கள் சேர்ந்திடுவோமே
பாசமுடன் பழகி விளையாடுவோமே
ஓடிப் பிடித்து விளையாடுவோமே
ஒளிந்து பதுங்கி விளையாடுவோமே



துள்ளி துள்ளி விளையாடுவோமே
துரத்தி துரத்தி விளையாடுவோமே
குளம் கரை எனக் குதிப்போமே
குந்தி குந்தி ஓடுவோமே

பந்தை எறிந்து பிடிப்போமே
பாங்காய் நின்று எறிவோமே
சிந்தை இனிக்கும் சோடிகளாய்
சிரித்து சிரித்து ஆடுவோமே



குழுக்களாய் பிரிந்து ஓடுவோமே
குறைகள் காணா பணிவுடனே
அழுக்காறு நம்மில் அகன்றுவிட
அன்புடன் என்றும் இணைவோமே



வெற்றியும் தோல்வியும் சமமாக
விரும்பி நாமும் ஏற்றிடுவோம்
நித்தம் முறையாய் முன்னின்று
நிம்மதி வாழ்வைப் பெற்றிடுவோம்.

# கா..கா..காக்கையாரே



காக்கையாரே காக்கையாரே
கறுப்பு வண்ணக் காக்கையாரே
கதறிக் கதறி கரைவதுமேனோ
காதைக் குத்தி வருத்துவதுமேனோ?



சின்னக் குழந்தை கையினிலே
சின்னத் தீனியைப் பறிக்கவென
எண்ணித் திட்டம் போடாதே
எறிந்து விடுவேன் கையாலே

வீட்டின் உள்ளே உற்றுப் பார்த்து
விட்டு வைத்த உணவினையா
பற்றிச் செல்ல வழிபார்த்து
சுற்றி சுற்றி ஆடுகிறாய்




தீக்குணங்கள் பல இருந்தும்
நற்குணங்கள் பல உன்னிலுண்டு
சுற்றாடல் சுத்தமாக்கும் உன்சேவை
சுகவாழ்வைப் பெற்றுத் தரும்



காகா எனக் கரைந்து
தன்னினம் கூவி அழைக்கும்
பரோபகாரம் மனித குலத்துக்கு
மறக்கொணாத படிப்பினையாம்.

31

# மிருகக் காட்சிச்சாலை




அரணுள் அடைபட்ட விலங்கினம்
பறவைகள் ஊர்வன மீனினம்
சிறப்பு காணச் சென்றிருந்தோம்
மிருகக் காட்சிச் சாலைக்கு



ஆழ்கடல் வாழும் மீனினங்கள்
அழகு நிறைந்த பளிங்குக் கூட்டில்
சுழன்று சுழன்று வளையும் கோலம்
கண்ணைப் பறிக்கும் காட்சியதாம்



கானகத்தின் காவலனாம் சிங்கம்
சீற்றம் முகத்தில் வெறிக்க
ஊனம் உற்ற தோற்றத்தில்
கர்ச்சனையின்றி தூங்குகின்றான்



புலியின் உறுமல் நரியார் ஊளை
உள்ளம் உடலைப் புல்லரிக்க
கழுதையின் ஓலம் கதறும் கரடி
காதைத் கனமாய் அடைக்கிறதே

ஞாயிறு விடுமுறை தினமதிலே
யானைப் பிளிறல் நடனத்துடன்
ஹாய் எனவே வணக்கங்கூறி
வரவேற்ற காட்சியை மறக்கொணாதே

32

# நிலைக் கண்ணாடி



அகத்தின் அழகை அப்படியே
முகத்தில் காட்டும் கண்ணாடியாம்
அழுகை சிரிப்பு பண்புகளை
பிரதி பண்ணும் கருவியதாம்



சின்னஞ் சிறுசுகள் முன்னே நின்று
சிரித்து மகிழ்ந்து முகம்பார்த்து
கண்ணைச் சிமிட்டி தன்னைப் பார்க்க
கதை சொல்லும் கண்ணாடியாம்



எதையும் மறைக்கா உள்ளம் போல
அடுத்தது காட்டும் பளிங்காகும்
இளமை காண தலையைச்சீவும்
இளைஞர் தன்னழகு ரசித்திடுவர்

கள்ளமற்ற உள்ளத்தின் கோலமதை
கணக்காகக் காட்டிடும் கண்ணாடி
தெள்ளெனத் தெளிவாக உருவங்களை
படமாய் பிடித்துவிடும் உயிர்நாடி



33

# துறைமுகம்



மாநகர் தன்னில் மதிப்புடன் திகழும்
துறைமுகம் காணச் சென்றிடுவோம்
கப்பல் வந்து கரையில் தரித்து
நிறையும் அழகை ரசிப்போமே



துறைக்குள் நுழையும் கப்பல் பொதிகள்
தூக்கி இறக்கும் தூக்கி யைப் பார்
தரையில் அவற்றை அடுக்கி வைக்கும்
அற்புதக் காட்சி தெரிகிறதே



அதோ பாருங்கள் வெளிச்ச வீடு
கண்ணைச் சிமிட்டி சுற்றிப் பார்க்கிறதே
தூரவரும் கப்பல்கள் திசையறிந்து
கரையைச் சேர உதவுகிறதே



குழாயின் ஊடே கரும்புகை கக்கும்
கப்பல்கள் செல்லும் காட்சியைப் பார்
உலகைச்சுற்றும் அந்நியர் கப்பலில்
கையசைத்து "பாய்" காட்டிச் சென்றிடுவர்

34

# தபாற்காரன்



தபாற்காரன் சேவையைப் போற்றிடுவோம்
காக்கிச் சட்டை கட்டைக் களிசன்
சைக்கிள் கூடையில் தபால்பொதிகள்
வாயில் முன்னே மணி அடிப்பான்



கொட்டும் மழையிலும் வந்திடுவான்
கொழுத்தும் வெயிலிலும் வந்திடுவான்
முகவரி முறையாய் பார்த்துவந்து
தாமதமின்றி தபால் கொடுப்பான்

வெளிநாட்டு பணிப்பெண் தபால்
உரிய உறவினர்க்கு கொடுத்திடுவான்
வேலை தேடி விண்ணப்பித்தவர்
ஏக்கத்துடன் அவனை நோக்கிடுவர்



தபாற்காரன் துயரை எண்ணியெண்ணி
கருணை கூர்ந்து உபசரிப்போம்
சிரமந் தாங்கும் அச்சேவகனை
நன்றியுடன் போற்றி புகழ்ந்திடுவோம்

35

# இரப்போர்க்கு இரங்குவோம்



என்றும் இரப்போர்க்கு இரங்கிடுவோம்
அவர்கள் எம்மை நாடி வருபவராம்
வாழ வசதியற்ற ஏழைகள்
வயோதிபமும் நோயும் அவர் சொத்து



எதற்கும் இயலா ஏழையைக் கண்டு
இதயம் இரங்கி உதவிடுவோம்
முடியும் தாடியும் நீண்டு வழியும்
கூனிக் குறுகி நடையில் நலிந்தவர்



கிழிந்த அழுக்குக் காவியுடை
கையிலே பழைய வெற்றுப் பை
நொண்டி நடக்கும் கால்களுடன்
மூக்குக் கண்ணாடி அணிந்தவராம்



பாதையைக் கடக்க தவித்தபோது
கரம் பிடித்துக் கடத்திடுவோம்
வயிறார உணவு அளித்து
உடல் போர்த்த உடை அளிப்போம்



36



# வானூர்தித் தளம்

வானூர்தித் தளம் காண்போம்
அகன்ற பரப்பில் வானூர்திபல
பேர் இரைச்சல் காதைத் துளைக்கும்
பெரிய சிறிய வானூர்திகள்



பயணிகள் நேர்த்தியான உடையில்
பைகள் பொதிகள் சுமந்தவராய்
சுறுசுறுப்பாய் நுழையவும் அகலவும்
வேளைதோறும் வாசலில் காவலர்

பெற்றார் பிள்ளைகள் உறவினரை
கூட்டிச் செல்வது கண்ணுக்கு விருந்து
பயணிகள் தத்தம் பொதிகளை
பிரித்துக் காட்டி "ஓகே" பெறுவர்

நாட்டுக்கு வரும் பயணிகள்
பொதிகளை உருட்டி வெளியேறி
பயணம் தொடர வாகனம் பெற்று
வரிசையாய் சென்றகல்வர்





# 37 மீன்காரன்



“மீனோ மீன் கரைவலை மீன்
பச்சைமீன் பிந்தினால் கிடையாது”
மீன்காரனின் வழமையான கூக்குரல்
மனையாள் காதுகளில் படுகிறது



மிதிவண்டியில் மீன் பெட்டியுடன்
மீனவன் தெருவில் சுற்றுகிறான்
பாரை பாலை சூடை முரல்
சூரை நெத்தலி மீன்கள் உண்டு



பாரையும் பாலையும் முரலும்
யானை விலை குதிரை விலை
சூரையும் சூடையும் கிரந்திக்கடி
மூதாட்டி மூக்கைச் சுளித்தாளே



காரல் ஒவ்வும் எனக் கண்டபோது
பேரம் பேசிப் பெற்றுக் கொண்டார்
நெத்தலி பத்தியம் எனக் கண்டு
மொத்தமாய் வாங்கிக் கொண்டனரே



அந்தி வேளை எஞ்சிய மீனுடன்
அழுந்திய மீனவன் விடு திரும்பியதும்
நொந்தவன் கணக்கைப் பார்த்தானே
நஷ்டம் பெரிதென மனம் சலித்தான்

38

# பூந்தோட்டம் தரிசிப்போம்



பூந்தோட்டம் தரிசிப்போம் வாரீர்
கண்ணைக் கவரும் பூக்கள் உண்டு
பச்சைப் பசேல் என மரங்களும்
செடி கொடி பூண்டுகளும் உண்டு



ஒரு புறம் பல வண்ண றோஜாக்கள்
மறுபுறம் செவ்வருத்தை வண்ணங்கள்
மனதைப் பறிக்கும் மல்லிகை வர்க்கம்
சூரியகாந்தியும் தனியொரு புறம்



வண்ணச் சுதை வடித்த தரைகள்
நிலத்தில் படரும் பூங்கொடிகள்
எண்ணிலடங்கா அலங்கார செடிகள்
எண்ணவே மணக்கும் நறுமணமாம்



வானுயர் மரங்களின் வடிவங்கள்
காய்த்துக் குலுங்கும் குலைகளுடன்
செடியின் இலைகளில் பலவடிவம்
இலைகளில் பல வண்ணம் பாரீர்



# 39

# நோன்புப் பெருநாள்



றமளான் மாதம் நோன்பிருந்து
இரவும் பகலும் இறைநினைவில்
இதயம் வருந்தி இரந்தபின்னர்
மறுநாள் பெருநாள் உவகையுடன்

சிறுவர் சிறுசுகள் கைகளிலே
மருதோண்டி இடம் பிடிக்க
தாயும் உறவினரும் சிற்றுண்டி
பலகார வகை சமைத்திட

புத்தாடை பொன்மாலை மற்றும்
புதிய பாதணி பார்த்தவர்கள்
விடியலை நோக்கிய ஏக்கத்துடன்
தம்பி தங்கையர் தூங்கிடுவர்

விடிந்ததும் விடியாததுமாய் காலை
விழித்தெழுந்த சிறுவர்கள்
பட்டாசு கொழுத்தி ஆர்ப்பரிக்க
பள்ளி நோக்கி தயாராகுவர்





தக்பீர் முழக்கம் ஒலிக்கவே
பள்ளிக் கடமை முடித்தவர்கள்
சகோதர பாசமதின் ஒளிவீச
சலாம்கூறி மனம் நிறைந்தார்

பகட்டான ஆடையுடன் பாலர்கள்
பொழுதை போக்க ஊஞ்சலாடுவர்
மிட்டாய்க் கடைகண்டு வாயூற
இனிப்பு வாங்கிச் சுவைத்திடுவர்

பெண்டிர் பட்டாடை உடுத்து
உறவினர் அயலவர் இல்லமேகி
பண்டம் பரிமாறி நாச்சுவைக்க
பலதும் பத்தும் பேசிமகிழ்வர்



## 40 வீட்டுத் தோட்டம்



வீட்டுத் தோட்டம் பாரப்போம்
விதம் விதமான செடிகள்
பலவகைக் காயும் பழமும்
தொங்கும் அழகை ரசிப்போமே



அவரை பீர்க்கு பாகல் எல்லாம்
உடநலம் காக்கும் காய் கறியாம்
உறைப்பு மிக்க மிளகாயை
கோழிகள் கொத்தித் தின்னுறதே



ஊதா வண்ண கத்தரிக்காய்
உவப்புடன் தின்ன ஏற்றதாமே
மாதர் விரலென வெண்டிக்காய்
மக்கள் மருந்தென உண்பாரே



முக்கனியில் பின்னிற்கும் வாழைமரம்
முழுக்குலை தந்து நிற்கிறதே
முருங்கை மரத்தின் இலைகாய்
உடலின் உரமாய் ஆகிடுமே



இறைவன் அருளிய செல்வமதாம்
என்றும் அவனைப் புகழ்வோமே
நிறந்த வாழ்வை நாம் பெறவே
நித்தியம் காய் கறி உண்போமே

# 41 எங்கள் வீட்டுப் பிள்ளை



எங்கள் வீட்டுப் பிள்ளை
இனியதான தென்னம் பிள்ளை
மங்களமாய் வாசல் முன்னே
மேகமென நிழல்தரும் பிள்ளை



வெய்யில் தாகம் தணிப்பதற்கு
குளுமை மிக்க இளநீரை
கையில் தந்து அருந்திடவே
கருணையுள்ள கற்பகப் பிள்ளை

உணவில் சுவைதனை ஊட்டிட
தேங்காய் பூவும் வெண்பாலும்
தினமும் ஈந்திடும் சேவகனாம்
தேனாமிர்தம் தென்னம் பிள்ளை



வீட்டுக் கூரை அமைத்திடவே
வேண்டிய கைமரம் சலாகையுடன்
சமையல் அடுப்பின் விறகுமட்டை
தும்பும் ஈர்க்கிலும் வழங்கிடுமே



உணவைச் சமைத்துக் கையாளும்
உயிரான கருவியாம் அகப்பை
சிரட்டையைச் சீவிப் பெற்ற
சிங்காரக் கைவண்ணம் அது



42

# நேயம் மிக்க பள்ளிக்கூடம்




எங்கள் நேயம் மிக்க பள்ளி
என்றும் இதயம் இரசித்திடுமே
மங்கள வாயில் முகப்பதுவோ
மனதைக் கொள்ளை கொண்டிடுமாம்



பூமர நிழலும் வாசனையும்
பூத்துக் குலுங்கும் அழகதுவும்
தாமரை வடிவின் நடுமுற்றம்
தாவிக் குதித்திட மனம் நாடுமே

வகுப்பறை வரிசை வண்ண்ணமிகு
வடிவில் நாமம் சூட்டியாங்கு
உவப்புடன் நுழையும் வாயிலிலே
உரிமையாய் ஆசானும் முன்னிற்பார்

காலை ஆராதனையில் ஒன்றுகூடி
கருணைமிகு இறையைப் போற்றி
சாலைக் கீதம் இசைத்ததோடு
அதிபர் போதனை கேட்டிடுவோம்



பாடம் வரிசையில் தொடர்ந்திடுமே
பாங்காய் ஒலித்திடும் மணியோசை
ஆடல் அபிநயம் அழகாய் முடிய
ஆறுதல் தருவது இடைவேளையாம்

நேயம் மிக்க நல்லாசான்கள்
நேர்மை குன்றா நல்லதிபர்
தாயின் அன்பில் எம்மை அணைக்கும்
தரத்தில் உயர்ந்தது எம்பள்ளி



# ஆசிரியர் பற்றி அதிபர்

திருமதி பௌஸியா அலியார் எனது பாடசாலையில் பல வருட காலமாக ஆசிரியையாகப் பணியாற்றியவர். அந்த வகையில் அவரது நூலாக்கம் வெளிவரும் சந்தர்ப்பத்தில் அவரை அறிமுகம் செய்வது பொருத்தம் எனக் கருதுகிறேன்.



இவ்வாசிரியை, நீண்ட மற்றும் அகன்ற இலக்கிய குடும்ப பாரம்பரியத்தைக் கொண்டவர். தன்னுடைய தந்தையார் நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயாவின் அன்பான அரவணைப்பில் இலக்கிய சாகரத்தில் மிதந்தவர். சிறுவயது முதல் பேச்சாற்றலையும் கவிதை புனையும் திறனையும் பெற்றிருந்தார்.

இவரது கட்டுரை, கவிதை ஆக்கங்கள் தமிழ்த் தினசரிகளில் அவ்வப்போது வெளி வந்துள்ளன. இவர் தன்கற்பித்தலில் ஏனையோருக்கு முன்மாதிரியாக விளங்கியதோடு தமிழ்மொழி பாட இணைப்பாளராகவும் பகுதித் தலைவராகவும் ஆசிரியர் சங்க செயலாளராகவும் பணியாற்றினார். இணைப்பாடவிதான செயற்பாடுகள் பலவற்றுக்குப் பொறுப்பாக இருந்தார். குறிப்பாக தமிழ்த்தினப் போட்டிகள் மாணவ மன்றம், மாணவர் சஞ்சிகை என்பன இவரது செயற்பாடுகளினால் புதுப் பொலிவு பெற்றன.

**நூலாசிரியர் இன்னும் பல நூல்களை வெளியிட்டு கல்வி உலகினை வளம் படுத்துவார் என நம்புகிறேன்.**

ரீ.எம். தௌபீக், அதிபர்
**கமு / சது / முஸ்லிம் மகளிர்வித்தியாலயம்**
**சம்மாந்துறை**

ISBN 978-955-4414-0-2

Rs.200

Rose Printers